**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No.852/2025**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 1 |
| Name (திரு/திருமதி) | : குமரேசன் |
| Father's Name/ Husband's Name | : சின்னதம்பி |
| Village & Taluk | : அவலூர்பேட்டை |
| Calling | : கூலி |
| Age | : 32 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.03.2026**

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :**

1. ஆஜர் எதிரியை எனக்கு தெரியும் கடந்த 2024ம் வருடம் ஒரு நாள் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி அருகே இருந்தபோது அடையாளம் தெரியாத நபர் ஒருவர் வந்து என்னை திட்டி தாக்கிவிட்டு ஓடிவிட்டார் யார் தாக்கினார் என்று அடையாளம் தெரியவில்லை. எதிரி தாக்கவில்லை. இது சம்பந்தமாக அவலூர்பேட்டை காவல் நிலையத்தில் புகார் மனு அளித்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது. மேற்படி புகார் மனுவில் உள்ள கையொப்பம் **அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** காவலர்கள் என்னை விசாரித்தனர்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி சாட்சியை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

1. ஆஜர் எதிரி எனக்கு தெரிந்த நபர் என்றால் சரிதான். கடந்த 10.02.2024ம் தேதி மதியம் 01.10 மணிக்கு நான் அவலூர்பேட்டை அரசு மேல்நிலைப்பள்ளி அருகே தர்பூசணி கடை வைத்து வியாபாரம் செய்து கொண்டிருந்தேன் என்றால் சரிதான். அப்போது ஆஜர் எதிரி என்னை தகாத வார்த்தைகளால் திட்டி, சைக்கில் பம்ப்பால் தாக்கி கொலை மிரட்டல் விடுத்தார் என்றால் இல்லை. நான் நடந்த சம்பவத்தை காவலர்கள் விசாரணையில் கூறிவிட்டு நானும், எதிரியும்

தற்போது சமாதானமாகிவிட்டபடியால் அவரை காப்பற்ற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை என குறிப்பிடப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/–B.Vidhya

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.